துதி மலர்

# 'கதவு' சிறப்பிதழ்

வருட சந்தா-Rs.50
தனி பிரதி -Rs.5
மலர் - 21
இதழ் - 7
மே 2020
16 பக்கங்கள்



## 'கர்த்தர் நம்மை நிச்சயமாய்த் தப்புவிப்பார்'

(2இராஜா.18:30)

Thuthi Malar,
Madurai.

12:39


## From: சகோதரி சுனித்தா சுகுமார்

துதி, 9, பிரசாத் சாலை, நரிமேடு, மதுரை-2

0452-2531627, 2533627, 9843031627




## To: துதி குடும்ப அங்கத்தினர்

ஐந்தாவது மாதத்திற்குள் தப்புவிக்கிற தேவனைக்குறித்த நம் பிக்கையோடுகூட நுழைந்திருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். எந்த நோயோ வைரஸோ அணுகாதபடி தம் இரத்தக் கோட்டைக்குள் மூடி தேவன் உங்களையும், குடும்பத்தினரையும் பாதுகாக்கவும், உங்கள் தேவைப் பட்டியலை தேவன் தம் ஐசுவரியத்தின்படி சந்திக்கவும், மன சோர்வோ, மனமடிவோ உண்டாகாதபடி தேவபிரசன்னம் உங்களை சூழ்ந்துகொள்ளவும் தினமும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

அரசு ஆணையின்படி அடைக்கப்பட்ட சூழலினிமித்தம் தபால் மூலம் ஏப்ரல் துதிமலரை உங்களுக்கு வழக்கமான சமயத்தில் அனுப்ப முடியவில்லை. உங்கள் **வாட்ஸ்ஆப் எண்** **மற்றும்** **இமெயில் முகவரி** எங்களுக்கு அனுப்பினால் துதி மலர் மற்றும் ஜெப மலர் உங் களுக்கு காலதாமதமின்றி உடனுக்குடன் அனுப்ப வசதியாயிருக்கும்.

முழு உலகை உலுக்குகிற கொரோனா வைரஸால் உண்டான கடுமையான சூழலும், சபைக்குச் செல்லமுடியாத நிலையும், இயல்பு வாழ்வில் ஏற்பட்ட பாதிப்பும் மிகவும் சமீபமாயிருக்கிற இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்பட நம்மை ஏவுகிறது. இன்னும் பரிசுத்தமாக வும், விசுவாசத்தில் வளரவும், வேதத்தை தியானிக்கவும், தேசத்திற் காக பாரத்தோடு ஜெபிக்கவும், சுவிசேஷத்தை அறிவிக்கவும் இந்த நாட்களை வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்வோம்.

மே மாதத்திற்கான **பயிற்சி** இது: உணவருந்துவதற்கு முன்னோ, வெளியே போய் வந்த பின்னோ கிருமிகள் அகலும்படி எப்போதெல் லாம் கைகளை கழுவி சுத்தப்படுத்துகிறீர்களோ அப்போதெல்லாம் 'என் இருதயத்தின் வேண்டாத சிந்தனைகள், கெட்ட நோக்கம், தீய மனப்பான்மைகள் என்ற கிருமிகளை அகற்றும்' என்று கருத்தாய் ஜெபியுங்கள். இது கிரமமான பயிற்சியாகட்டும்.

துதி ஊழியத்திற்காகவும், எனக்காக, கணவருக்காக, அன்பு பிள்ளைகள் சாம் மற்றும் சுவி, உடன் ஊழியர்கள் அனைவருக்காக வும் தயவாக நேரமெடுத்து மன்றாட அன்பாய் வேண்டுகிறேன்.

**நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களா யிருக்கும்படி.தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையை பெருக செய்ய வல்லவர் (IIகொரி.9:8)** என்பதை நாளும் நிரூபிப்பாராக!

உங்கள் அன்பு சகோதரி,

*Sunitha Sukumar*

மலர் : 21
2020
'பொருட்கள்'
ஸ்பெஷல்

எங்கள் முகவரி
துதி,
9, பிரசாத் சாலை,
நரிமேடு, மதுரை - 2

செய்தி

நிச்சய முடிவு! ..5
கதவு கற்பிப்பது! ..11

சிறப்புப் பகுதி

அன்றும் இன்றும் என்றும் ..10

இதழ் : 7
மே
'கதவு' சிறப்பிதழ்

தொடர்புகொள்ள
(91)9843031627
(0452)2531627
(0452)2533627

# துதி மலர்

மே 2020

சம்பவம்

எங்கேயோ அங்கேயே ..9

ஜெப நாட்கள்

இரவு ஜெபம்
02/05/2020

முழு இரவு ஜெபம்
09/05/2020

உபவாச ஜெபம்
6, 13, 20, 27/05/ 2020

தொடர்

தி.மு. - தி.பி. ...4
என்னைப் பற்றி
சொல்லணும்னா ...8
நீங்க யார்...? ..15
செல்லணும்....
சொல்லணும் ..15

## கவனியுங்கள்

வங்கிமூலம் நன்கொடை எங்களுக்கு அனுப்ப உங்கள் முகவரியை தபாலில் **துதி டிரஸ்ட், 9 பிரசாத் சாலை, மதுரை** அல்லது இமெயிலில் **thuthiministries@gmail.com** அல்லது தொலைபேசிமூலம் **0452-2531627, 9843031627** தெரியப்படுத்தினால், வங்கி கணக்கு விபரங்கள் அனுப்ப வசதியாயிருக்கும்.

## தயவான வேண்டுகோள்

தாங்கள் நன்கொடை அனுப்பும்போது **THUTHI TRUST (துதி டிரஸ்ட்)** என்றுமட்டுமே அனுப்புங்கள். துதி, துதி மலர், துதி ஊழியங்கள் (Thuthi Ministries) என்று தயவுசெய்து எழுதாதீர்கள். நீங்கள் இப்படி அனுப்புவதை உங்களுக்கே திரும்ப அனுப்பி மாற்றித் தர கேட்க வேண்டியதாய் இருக்கிறது.

Thuthi Malar, Vol:21, Issue:7, May, 2020, Monthly, Individual copy: Rs.5, Annual subscription: Rs.50, Place of Publication: Madurai.

Published by Tmt.Sunitha Sukumar, Printed by M.Rajkumar on behalf of Tmt.Sunitha Sukumar. Printed at M/S. Bhavani Fine Arts, 37/2, New No: 102, Velayutham Road, Sivakasi, Virudhunagar District, TamilNadu-626123. Published from 9, Prasad Road, Narimedu, Madurai-625002(T.N). Editor: Tmt.Sunitha Sukumar

**நோய்க்கிருமிகளை அழிக்கும் மருந்தாலும் அல்ல,**
**சரீரத்தை பலப்படுத்தும் பழச்சாறாலும் அல்ல,**
**கலக்கப்பட்ட தண்ணீரால் ஆரோக்கியமாம்!!**

# தி.மு-தி.பி.

திருப்பத்திற்கு முன் – திருப்பத்திற்கு பின் என்ற இம்மாத தொடரில் இடம் பெறுவதை யூகிக்கமுடிந்ததா? மருந்தாலும், பலப்படுத்தக்கூடியவை களாலும் தரமுடியாத ஆரோக்கியம், பெதஸ்தா குள தண்ணீரை தேவ தூதன் கலக்கும்போது முந்தி இறங்குகிற நோயாளிக்கு கிடைத்தது. அங்கே தொடர்ந்து 38 வருடங்களாய் படுக்கையிலிருந்த ஒரு நோயாளி மற்றவரின் உதவியோடு முந்தி குளத்தில் இறங்க எதிர்பார்ப்போடு காத் திருந்தான். ஒவ்வொரு முறையும் சுகமாகும் வாய்ப்பை இன்னொருவர் பெற்றதையே ஏமாற்றத்தோடு பார்த்தான். அந்த ஒருவனை தேடி வலிய இயேசு போனதையும், அவன் எதிர்பார்த்தபடி குளம் கலக்கப்படும்போது உதவி செய்து அல்ல, எதிர்பார்த்திராத விதத்தில் அவனை விசாரித்து சுகத்தை அளித்ததையும் யோவா.5:2-9 வசனங்களில் வாசிக்கிறோம்.
இயேசு 38 வருட நோயாளிக்குள் திருப்பமுண்டாக்கும் முன்னும் பின்னும்:

| திருப்பத்திற்கு முன் | திருப்பத்திற்கு பின் |
|---|---|
| வியாதியோடு குளத்தருகே படுத் திருந்த பலரில் ஒருவன் | இயேசுவால் கொடிய வியாதி நீங்கி ஆரோக்கியத்தோடு திரும்பியவன் |
| வருடக்கணக்காய் குளத்தருகே நோயினால் முடங்கியிருந்தவன் | இயேசுவின் வரவால் நொடிப் பொழுதில் ஆரோக்கியமடைந்தவன் |
| குணமடையும் நம்பிக்கையோடு குளத்தருகே காத்திருந்தவன் | நம்பிய குளத்தால் அல்ல, இயேசுவாலே நம்பமுடியாதளவு விடுதலையடைந்தவன் |
| உதவியை எதிர்பார்த்து குளத்தின் அருகே படுத்திருந்தவன் | இயேசுவிடமிருந்து எதிர்பார்க்காத உதவியாய் ஆரோக்கியம் பெற்றவன் |
| குளத்தையே பார்த்து அதுவரை ஏமாற்றத்தைமட்டுமே கண்டவன் | தேடிவந்த இயேசுவை கண்டபோதோ அற்புத சுகத்தை பெற்றனுபவித்தவன் |

38வருட நோயாளியை விசாரித்த இயேசுவிடம், தண்ணீர் கலக்கப் படும்போது தன்னைக் குளத்தில் கொண்டுபோய் விட ஒருவருமில்லை. நான் போவதற்குள் வேறொருவன் முந்தி இறங்கிவிடுகிறான் என அவன் சொன்னான். ‘ஒருவருமில்லை’ என்ற உதவியற்ற நிலையும், சுகமாகும் வாய்ப்பை தட்டிச்செல்லும் ‘வேறொருவன்’ என்ற ஏமாற்றமுமே அதுவரை அவன் கண்டது. நிமிடப்பொழுதில் சுகமடையும்படி உதவி செய்யவும், சுகம்பெற்ற பாக்கியசாலியாய் அங்கிருந்து அவனை வெளியேற செய்ய வும் இயேசு அவனை தேடி வந்தார். முடக்கப்பட்ட அவன் வாழ்வு முடி விற்கு வந்தது. உதவியற்ற உங்கள் நிலையையும், ஏமாற்றத்தில் தொடரு கிற வருடங்களையும் இயேசு பார்த்திருக்கிறார். நீங்கள் எதிர்பார்த்திராத விதத்தில் தலைகீழ் திருப்பத்தை ஏற்படுத்த அவர் குறுக்கிடும் சமயமிது.

# நிச்சய முடிவு

# ‘கர்த்தர் நம்மை நிச்சயமாய்த் தப்புவிப்பார்’ (IIஇராஜா.18:30)

சகோதரி சுனித்தா சுகுமார்

**எது நிச்சயம்?** தப்புவிக்கிற முடிவு உண்டாவது நிச்சயம்.

**எவருக்கு நிச்சயம்?** தேவன் தலையிடும்படி அவரையே எதிர்பார்ப்போடு நோக்கியிருப்பவரை தப்புவிப்பது நிச்சயம்.

**எப்படி நிச்சயம்?** கடந்த காலத்தில் தப்புவித்தது போலவே, நிகழ்காலத்திலும் தப்புவிப்பது நிச்சயம்.

**எப்போது நிச்சயம்?** அனுபவமோ, ஆலோசனையோ, அனுகூல கணிப்போ, அறிவுப்பூர்வ முயற்சியோ கைகொடுக்காவிட்டாலும் தப்புவிப்பது நிச்சயம்.

**ஏன் நிச்சயம்?** எவ்வளவேனும் பொய்யுரையாத சர்வவல்ல தேவன் நேற்று தப்பு வித்தவர், இன்று தப்புவிக்கிறவர், நாளை தப்புவிப்பவர் என்பதால் நிச்சயம்.

## ஆச்சரியமான முடிவு:

எல்லாவற்றிலும் முடிவுதான் முக்கியமானது. நடந்துவந்த வழி களை பின்திரும்பி பார்த்தால், பயமுறுத்திய கட்டங்களைச் சந்தித்த போது எதிர்மறைகளின் அடிப்படையில் முடிவைப்பற்றி முன்னறிவித்த கணிப்பு பயங்கரமாயிருந்தது உண்மைதான். ஆனால் தேவதுணையுடன் நீங்கள் எதிர்கொண்டதால் அவைகள் நன்மை, வெற்றி, திருப்தி என்றே முற்றுப் பெற்றதையும் பார்த்தீர்கள் அல்லவா? தற்சமயம் பயமுறுத்தும் கேள்வியோடு முன்நிற்பவைகளிலும் ஆச்சரிய முடிவையே பார்ப்பீர்கள்!

அப்.27-ம் அதிகாரத்தில் வாசிக்கிற பயணத்தில் கப்பல் கடுங்காற் றிலே சிக்கிக் கொண்ட தருணம், பெருங்காற்று மழையில் தவித்த வேளை, தப்பிப்பிழைக்கும் நம்பிக்கை முழுவதும் அற்றுப் போன கட்டம், உண்ணுவதற்குக்கூட மனமில்லாதளவு தைரியமிழந்த நேரம் என படிப் படியாய் நிலைமை மோசமானது (அப்.27:14,15,18,20,33). என்றாலும் கப்ப லில் பவுலோடு இருந்த 276 பேரும் தப்பிக் கரை சேர்ந்தார்கள் (அப். 27:37,44) என்பது எத்தனை ஆச்சரியமான முடிவு! பிரயாணத்தை துவங் கியவர்கள் முற்றிலும் எதிர்மாறானவைகளையே அடுத்தடுத்து சந்தித்த போதும் ஒருவர்கூட விடாமல் எல்லாரும் தப்பியது எத்தனை ஆச்சரியம்!

மரணம் வருமென்று எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம் என எழுதுகிற பவுல், அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்பு வித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என நம்பி யிருக்கிறோம்(IIகொரி.1:9,10)என அடுத்த வசனத்தில் முடிக்கிறார். குடும்ப மாய், சபையாய், ஊழியமாய் தேவனையே நோக்கிப் பார்க்கிற உங்களை யும் ஆச்சரியமாய் அவர் தப்புவிக்க வல்லவர். பயமுறுத்தும்படி இடையில்

எதிர்கொள்பவைகளை பார்த்து நின்றுவிடாதீர்கள். தப்புவிக்க வல்லவர் பத்திரமாய் சேர்க்கும் ஆச்சரிய முடிவை நோக்கி உங்களை நடத்துகிறார்.

## அதிசயமான முடிவு:

நடப்பு நிலையின் அடிப்படையில் உலகம் சொல்வதற்கு மாறாக தேவன் சொல்பவைகளை உறுதியாய் பற்றிக் கொள்ள வேண்டிய நேர மிது. அது அதிசயமான முடிவுக்கு நேராக நடத்தும். வெகு நாட்களாய் பிர யாணத்தில் தொடர்ந்து முன்னேறிப் போகமுடியாதபடி ஒரு துறைமுகத் திலேயே கப்பல் நின்று கொண்டிருந்தது. புறப்பட வேண்டாம் என பவுல் தடுத்தற்கு மாறாய் புறப்பட்டபோது உயிருக்கு ஆபத்தாய் காரியங்கள் சம்பவித்தது. புறப்படும்படி அனுபவ அடிப்படையில் மாலுமி சொன்னது கைகொடுக்கவில்லை. கப்பலின் எஜமான் தந்த உத்தரவாதம் பலிக்க வில்லை. அநேகம் பேர் சொன்ன ஆலோசனை பலன் தரவில்லை. நூற் றுக்கு அதிபதியின் கணிப்பு உதவிசெய்யவில்லை. தற்காலிகமாய் வீசிய தென்றல் காற்றின் அடிப்படையிலான அனுமானம் ஒத்து வரவில்லை. அத்தனையும் மோசமாய் பாதிக்கப்படவே காரணமானது (27:10-14).

தேவவார்த்தையை பெற்ற பவுல் முதலிலேயே அப்பயணம் மோச மடைய, வருத்தமடைய, சேதமடைய காரணமாகும் என்றே எச்சரித்தும், (27:9,10) அதை மீறி பயணம் தொடர்ந்தது. அதனால் தப்பிப் பிழைக்கும் நம்பிக்கை அற்றுப்போகுமளவு காரியங்கள் பாதகமாய் நேரிட்டது. அப் போதும் திடமனதாயிருங்கள் என பவுல் தைரியப்படுத்தினார் (27:20-22). கப்பற் சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராண சேதம் வராது (27:22) என தேவநடத்துதலின்படி உறுதிமொழி கொடுத்தார். தப்பிப் பிழைப்பதற்கு உதவியாயிருக்கும்படி போஜனம்பண்ண ஆலோசனை சொன்னார் (27:34). உங்கள் தலையிலிருந்து ஒரு மயிரும் விழாது (27:34) என்று முன்னறிவித்தார். எனக்கு சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்(27:25) என்று பவுல் நம்பி இருந்தபடியே தேவன் செய்தார். நடப்பு சூழலும், அடுத்தடுத்து நடந்தவை களும், சந்தித்த காரியங்களும் எதிராகவே இருந்தாலும், பவுலின் மூல மாக சொல்லப்பட்ட தேவவார்த்தைகள் உடனிருந்த எல்லாரையும் தேற்றி யது, திடப்படுத்தியது, சோர்வை நீக்கியது, அப்படியே நிறைவேறியது.

காதில் கேட்கிற எதிர்மறைகள் அல்ல, தேவவார்த்தைகள்தான் நம்பிக்கையூட்டும் நங்கூரமாயிருக்கும். நாம் ஆராதிக்கிற தேவனே தப்புவிக்க வல்லவர். இவ்விதமாய் தப்புவிக்கத்தக்க தேவன் வேறொரு வரும் இல்லை என்பதை எல்லாரும் அறியும்படி நிரூபிப்பார். தானி யேலை சிங்கங்களின் கைக்கு அன்று தப்புவித்து (தானி.6:27) முத்திரை பதித்தவர் இன்று உங்களையும் நீங்கள் சந்திக்கிற நம்பிக்கையற்ற எல்லா நிலையிலிருந்தும் தப்புவிக்கிறவர்.

# அனுகூலமான முடிவு:

சமாளிக்க கடினமான சூழலின் வழியாக கடந்து சென்றாலும், அனுகூலங்களை தந்து போஷித்து பராமரிக்க தேவன் உண்மையுள்ள வர். பஞ்ச காலத்திலும் விதவை குடும்பத்தை மட்டுமல்ல, அவர்களோடு கூடிக்கொண்ட அவள் வீட்டாரையும் பட்டினியின்றி போஷிக்க அவர் களுக்காகவே அவர்களோடிருக்கும்படி எலியா தீர்க்கனை அனுப்பிய வர், ஒவ்வொருவர்மேலும் கரிசனையுள்ளவர். அந்தந்த சமயத்திற்கேற்ற அனுகூலங்களை அருள அவர் உங்கள்மேலும் நினைவாயிருக்கிறார்.

கப்பல் புறப்பட்டபோது கொண்டு வந்த சில சரக்குகளை மழை மற்றும் பெருங்காற்றினிமித்தம் கடலில் எறிய வேண்டியதாயிற்று. கப்ப லின் தளவாடங்களைகூட தங்கள் கையினாலே எடுத்து எறியும் நிலை வந்தது. மீதமாயிருந்த கோதுமையை கடலிலே எறிந்து கப்பலை இலகு வாக்க வேண்டியதாய் இருந்தது (27:18,19,38). அநேக நாட்களாய்ச் சூரிய னாவது நட்சத்திரங்களாவது காணப்படாதளவு பாதிப்பு உக்கிரமாயிருந் தது(27:20). 14 நாட்களாய் உணவு உண்ணக்கூட மனமின்றி பதட்டத்திலும், பயத்திலும் ஒவ்வொரு நிமிடமும் கழிந்தது (27:33). என்றாலும் பவுலின் வார்த்தையைக் கேட்டு எல்லாரும் தைரியமடைந்தார்கள். பவுல் புசித் ததைப் பார்த்த சக பயணிகள் எல்லாரும் திருப்தியாக புசித்தார்கள் (27:34-36). அந்த நாட்களிலும் யாரும் பலவீனமடையாமல், மனநிலை பாதிக்கப்படாமல் தேவன் அநுகூலம் பண்ணினார். அதோடு அந்நிய ரிடமும் அக்கறை காட்டி, அந்நியரையும் அன்பாய் விசாரிக்கிற, அந் நியரையும் பட்சமாய் அன்புடன் சேர்த்துக் கொண்ட மெலித்தா தீவாரிடத் தில் கரை சேரும்படி தேவன் அநுகூலம் பண்ணி வழிநடத்தினார்(28:1,2).

குறைவு, இல்லாமை, தனிமை, தட்டுப்பாடு, உழைக்கமுடியாமை, குடும்பத்தாருடன் இணைய முடியாமை இப்படி பலதரப்பட்ட திடீர் சூழ லில் அகப்பட்டுக் கொண்டாலும் தம்மை நம்பி இருக்கிற ஒவ்வொரு வரையும் இதுவரை நம்பமுடியாத விதங்களில் தேவன் நடத்தி வந்திருக் கிறார் அல்லவா? எங்கும் போகமுடியாததின் நிமித்தம் என்ன செய் வேன், எப்படி சமாளிப்பேன் என்று கலங்கி நின்றபோது கைவிடாமல் கரம் பிடித்து நடத்தி அநுகூலம் பண்ணியிருக்கிறார் அல்லவா? இது வரை நடத்திய அன்பு தேவன் எதிர்பார்க்காத வழிகளில் தம் அனந்த ஞானத்தின்படி தப்புவித்து அநுகூல எல்லையில் பத்திரமாய் கரை சேர்க்க உண்மையுள்ளவர். கர்த்தர் ஒருவரே எல்லா கட்டத்திலும் ஒவ் வொருவரும் சார்ந்து கொள்ளக்கூடிய அநுகூலமான துணை(சங்.46:1). உங்கள் பட்சத்தில் இருக்கிற கர்த்தர் அநுகூலங்களையும், அநுகூலம் பண்ணுகிறவர்களையும் உங்களை நோக்கி திருப்புவார்.

**உன்னைத் தப்புவிப்பதற்காக.. நான் உன்னுடனே இருக்கிறேன் என்று சொன்ன கர்த்தர் (எரே.15:20) தப்புவிக்க உண்மையுள்ளவர்.**



# என்னைப் பற்றி சொல்லணும்னா...

**ஈசாக்கை சுமந்த கழுதை:** தகனபலியாய் செலுத்த பிள்ளையோடு சென்றோம். தகனபலி செலுத்தி பிள்ளையோடு திரும்பினோம். **கீழ்ப்படிகிறவர்களுக்கு கிரகிக்கமுடியாத ஆச்சரியங்கள் காத்திருக்கிறது** (ஆதி.22:1-19)

**பட்சணங்களை சுமந்துசென்ற கழுதைகள்:** உயிரோடில்லை என நம்பப்பட்ட யோசேப்பு உயிரோடிருக்கிறான் என்பதற்கான ஆதாரத்தோடு பட்சணங்களை சுமந்துபோனவர்கள் நாங்கள்தான்! **சொல்லப்பட்டது மறக்குமளவு எதிர்மறைகள் எழும்பிநின்றாலும், மலைக்குமளவு மகிமையாய் செய்துகாட்ட சர்வவல்லவர் உயிரோடிருக்கிறார்!** (ஆதி.45:23-27)

**தீர்க்கனை சுமந்த கழுதை:** காலியாக வேண்டிய என் எஜமானை நான் காப்பாற்றியதால், பேசமுடியாத நான் ஒரே ஒரு முறை பேச படைத்தவரே அனுமதித்தார். **ஆதரவாக இருக்கவேண்டிய தேவன் எதிரியாக புறப்படுவதை விளங்கி நடந்தால் விபரீதங்களை தவிர்க்கலாம்!** (எண்.22:21-33)

**வெற்றிக்கு பயன்பட்ட கழுதை:** பலியாய்ப் போன என் தாடையெலும்பு எதிரிகளை பலியாக்க பயன்பட்டது. **அற்பமானதைக் கொண்டும் தேவன் அபாரமானவைகளை நிகழ்த்துவார்!** (நியா.15:15-17)

**சவுலின் கழுதை:** காணாமற்போன என்னை தேடி வந்தபோதுதான் தன்னைக்குறித்த தேவதிட்டத்தை சவுல் கண்டுபிடித்தார். **தேவதிட்டத்தில் வந்து சேர அவர் அனுமதிக்கிற கேள்விக்குறிகள் நன்மைக்கே!** (Iசாமு.9:3-10:1)

**அபிகாயிலை சுமந்த கழுதை:** தீவிர அழிவை தடுக்க எடுத்த தீவிர நடவடிக்கைக்காய் பயன்பட்டது நாங்களே. **தேவதிட்டத்தில் நம் பங்கை புரிந்து செயல்பட தீவிரமாயிருந்தால் அழிவு தடுக்கப்படும்!** (Iசாமு.25:18-24,34)

**நற்செய்தியை சுமந்த கழுதை:** பயப்பட்ட நாளை பயப்படுத்தும் நாளாக்கிய கட்டளையை தீவிரமாய் சுமந்துசென்று பரப்பியவர்கள் நாங்கள்தான்! **பயப்படாதே என வாக்களித்தவரால் பயப்படுத்துகிற எந்த குறிப்பும் பரவசப்படுத்தும் குறிப்பாகும்** (எஸ்தர் 3:15, 8:12-14)

**யோபின் கழுதை:** எதிரி சாய்த்துப்போனது 500 என்றால், தேவனுடைய ஆசீர்வாதத்தால் நாங்களோ 1000 ஆக பெருகினோம். **இழப்புக்கு ஈடு கட்டும் தேவனின் ஆசீர்வாதம் இணையற்றது!** (யோபு.1:3,14,15, 42:12)

**இயேசுவை சுமந்த கழுதை:** எங்கள் இனத்தைச் சேர்ந்ததுதான் ராஜாதி ராஜாவை சுமந்துசெல்ல முன்குறிக்கப்பட்டது என்றால், எத்தனை பெரிய பாக்கியம். **இயேசுவை சுமக்க தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பாக்கியத்திற்கு ஈடு இணை எதுவுமில்லை!** (மத்.21:2-7)

ஜூன் மாதத்தில் பேசவிருக்கும் வேகமான விலங்கை எதிர்பாருங்கள் (**தொடரும்**)

# எங்கேயோ...அங்கேயே!

**'5 தாலந்தை..2 தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே' (மத்.25:20,22).**

பள்ளி விடுமுறையில் அம்மா எங்கும் அழைத்துப்போகவில்லை என்று ஜெஸிக்கு ரொம்ப வருத்தம். அவளை சந்தோஷப்படுத்த அவள் அம்மா மினு, மிருகக் காட்சி சாலைக்கு அன்று அழைத்து சென்றார்கள்.

சிங்கம், புலி, யானை என ஒவ்வொரு மிருகமாக பார்த்துவிட்டு கடைசியாக ஒட்டகத்திற்கு அருகில் வந்தபோது அதன் முதுகில் இருந்த திமிலைப் (hump) பார்த்து, 'அம்மா, அம்மா அந்த ஒட்டகத்தின் முதுகில் ஏம்மா அப்படி பெரிதாய் வீங்கியிருக்கிறது?' என கேட்டாள். அதற்கு மினு, 'அது வீக்கமில்ல செல்லம், அதுதான் திமில். அதற்குள் தண்ணீர் இருக்கும்'. 'தண்ணீரா? ஒட்டகத்தின் முதுகிலா?' என மகள் ஆர்வம் பொங்க கேட்டாள். 'ஆமாம் குட்டிம்மா, பாலைவனத்தில் தண்ணீர் இருக்காது என உன் பாடப்புத்தகத்தில் படித்தது உனக்கு ஞாபகம் இருக்கிறதா? அப்படி பாலைவனத்தில் போகும்போது, அதற்கு தண்ணீர் தேவைப்பட்டால் அதிலிருந்து எடுத்துக்கொள்ளும்' என்றாள் மினு. 'அப்படியா!' என்று ஆச்சரியப்பட்ட ஜெஸி, 'எதற்கு இவ்வளவு பெரிய பாதம்?' என்று கேட்டாள். 'பாலைவனத்தில் நிறைய மண் இருக்குமில்ல, அதை மிதித்து நடக்க வசதியாய் இருக்கும்படி இவ்வளவு அகலமான பாதங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது' என்று பதிலளித்தாள் மினு. 'அதன் இமைகள் ஏன் இவ்வளவு பெரிசா இருக்கு?' என்று அடுத்த கேள்வி தொடுத்தாள் ஜெஸி. 'பாலைவனத்தில் காற்று வேகமாக வீசும்போது கண்ணுக்குள் மண் போகாதிருப்பதற்காகத்தான் பெரிய இமைகள் அதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது' என்றாள் மினு. 'அப்படியா!' என்று பிரமித்த மகள், 'பாலைவனத்திற்கேற்ற அவயவங்களைப் பெற்ற ஒட்டகம் இந்த மிருகக்காட்சி சாலையில் இருப்பதினால் என்ன பிரயோஜனம்? இந்த ஒட்டகம் பாலைவனத்தில்தானே இருக்க வேண்டும்' என்று எழுப்பிய கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் அம்மா மினு திணறிப்போனார்கள்.

**<u>ஆலோசனை:</u> 'சகலமும் அவராலும் அவர்மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது' (ரோம.11:36). தேவனின் உயர்ந்த நோக்கம் நிறைவேற அவர் வைத்த இடத்தில் இருப்பதே ஏற்றது. அந்த இடமே தேவன் தந்த திறமையும், தாலந்தும் வீணாகாமல் அவருக்காக பயன்பட ஏதுவாயிருக்கும்.**

**<u>செய்முறைப் பயிற்சி:</u> தேவன் உங்களுக்கு தந்திருக்கிற சிறப்பம்சங்களை கண்டுபிடியுங்கள். அது பயன்படும்படி தேவன் வைத்த இடத்திலா அல்லது வீணாகும்படி உங்களுக்கு பிடித்த இடத்திலா நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என யோசித்துப் பாருங்கள்.**

அன்றும் இன்றும் என்றும்

**அன்று: தாவீது**
**இன்று: ரூபி அருளானந்தம்**
**நாளை: நீங்கள்தான்!!**

எதிரி புகுந்து கொள்ளையடித்த சிக்லாகு பட்டணம் அக்கினியால் முற்றிலும் சுட்டெரிக்கப்பட்டது (Iசாமு.30). ஸ்திரீகள், பெரியவர்கள், சிறியவர்கள் எல்லாரும் சிறைபிடிக்கப்பட்டனர். தாவீதும் அவன் மனுஷரும் யுத்தத்திலிருந்து திரும்பிவந்தபோது கண்ட வெறுமை பெலனற்று போகும்வரை கதறி அழ வைத்தது. நீ சகலத்தையும் திருப்பிக் கொள்வாய் என தேவன் நம்பிக்கையளித்தார். தாவீதும் சேனையும் எதிரிகளை பின் தொடர்ந்தனர். எதிரி கொள்ளையாடிப்போன எல்லாரையும், எல்லாவற்றையும் ஒன்றும் குறைவுபடாமல் அப்படியே திருப்பிக் கொண்டனர்.

கிடைக்க வாய்ப்பே இல்லை என முன்னறிவித்த நடப்பு நிலையில் தேவன் கூட இருந்ததால் உரியதை திரும்ப பெற்றுக் கொண்டோம் என்கிறார் **திருமதி ரூபி அருளானந்தம்.** அவர்கள் சகோதரரின் மனைவி 2000 வருடத்தில் இறந்து விட்டார்கள். மகளுக்கு கிடைக்கவேண்டிய பூர்வீக சொத்து கிடைக்கவில்லை. 2001-ல் போடப்பட்ட வழக்கின் தீர்ப்பு 2008-ல் அவர்களுக்கு சாதகமாக வந்தது. திரும்பவும் எதிர் தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்கள். 2015-ம் ஆண்டிலும் உயர்நீதிமன்ற தீர்ப்பு இவர்கள் பட்சமாகவே வந்தது. மறுபடியும் எதிர்தரப்பினர் பெயர் தப்பாக இருக்கிறது என உயர்நீதிமன்றம் சென்றார்கள். ஆனால் வழக்கை விசாரித்த நீதிபதி இவர்களை அழைத்து, பெயரை மட்டும் மாற்றி வாருங்கள், முடித்துவிடலாம் என சொல்லியிருக்கிறார். ஆனால் அதற்குள் அவர் மாறுதலாகி போய்விட்டார். திரும்பவும் வழக்கு தொடர்ந்தது. நம்புவதற்கு மாறாக காரியங்கள் நடந்தாலும், அவர்களோ நம்பிக்கை இழக்காமல் நீதியுள்ள நியாயாதிபதியாகிய இயேசுவிடம் காரியங்களை விடாமல் தெரியப்படுத்தி கொண்டிருந்தார்கள். முன்பு தீர்ப்பளித்த அதே நீதிபதி 2019-ல் திரும்பவும் வந்தார். இன்னுமா இந்த கேஸ் முடியவில்லை என கேட்டு, அந்த பூர்வீக சொத்தான வீடு இவர்களுக்கே என தீர்ப்பு அளித்தார். இது தேவனே செய்த மிகப் பெரிய அற்புதம். 2020 பிப்ரவரி மாதம் உயர்நீதிமன்ற ஆணையுடன் வீட்டை காலி பண்ண அதிகாரிகளை அழைத்துச் சென்றனர். வீட்டின் 3 தளத்திலும் குடியிருந்தவர்கள் காலிசெய்ய வேண்டாம் என எதிர்தரப்பினர் சொன்னதோடு, காலி செய்யும் நடவடிக்கையை தடுக்க ஆட்களையும் ஆயத்தம் பண்ணியிருந்தனர். ஆனால் எதிர்க்க வந்தவர்கள் எல்லாரும் இவர்கள் குடும்பத்தினருக்கு தெரிந்தவர்கள் என்பதால், பிரச்சனை பண்ணுவதற்குப் பதிலாக இவர்களோடு இணைந்து வீட்டை காலி செய்ய உதவி செய்தார்கள். எல் லாம் நேர்த்தியாய் முடிந்து, இவர்கள் கையில் வீட்டு சாவி தரப்பட்டது.

**ஆள்பலம் அல்ல முக்கியம்! உங்களோடிருக்கும் சேனைகளின் கர்த்தருடைய பலத்தால் இழந்ததையும், உரியதையும் திருப்பிக்கொள்ளும் பாக்கியத்திற்கு சான்றாகப்போவது, வேறு யாருமல்ல நீங்கள்தான்!**

# கதவு கற்பிப்பது!

Sis.சுனித்தா சுகுமார்

பாதுகாப்பிற்கு கதவு அவசியம் என்பதால், கதவில்லாத கட்டடங்களை காண முடியாது. சீஷர்கள் பயத்தோடு கூடியிருந்த இடத்தின் கதவு, பவுலும் சீலாவும் அடைக்கப்பட்ட சிறைச்சாலையின் கதவுகள், யோசேப்பு போடப்பட்ட காவல்கிடங்கின் கதவு... இதன்மூலம் கற்போம் வாருங்கள்.

## கதவிற்குள் நுழைந்து நற்செய்தி 

ஞாயிற்றுக் கிழமை சாயங்கால வேளையில் 10 பேராய் சீஷர்கள் கூடியிருந்தார்கள். பூட்டப்பட்டிருந்த கதவை தட்டவோ, திறக்கவோ அவசியமின்றி 11-வது நபராய் இயேசு உள்ளே நுழைந்தார். சீஷர்களின் எண்ண அலைகள், உள்ள குமுறல்கள், கேள்விகள் அத்தனையையும் அறிந்த இயேசு நற்செய்தி சொல்லி அவர்களை ஆச்சரியப்படுத்தினார். அப்போது சொல்லப்பட்ட அதே நற்செய்தி இன்று நமக்கும் பொருந்தும்.

**அறிந்திருந்தார்:** இயேசு உயிரோடு எழுந்ததைப் பற்றி அன்று ஊரெங்கும் பரபரப்பாய் பேசப்பட்டிருக்கும். சீஷர்களிடம் விசாரித்தறிய பலர் அவர்களை தேடியிருப்பார்கள். அதுவரை நடந்ததும், அடுத்து நடக்க விருப்பதும் சீஷர்களுக்கே புரியாததால் யூதர்களுக்குப் பயந்து பதட்டத்தோடு பூட்டிய அறைக்குள் இருந்தனர். நடப்பு சூழலினிமித்தம் அவர்களுக்குள்ளிருந்த பயத்தை விளங்கி கொண்ட இயேசு அவர்கள் எதிர் பார்க்காமலே, அழைக்காமலே, பூட்டப்பட்ட கதவை திறக்காமலே உள்ளே நுழைந்தார் (யோவா.20:19). இன்று நீங்கள் பார்க்கிற, கேட்கிற தகவல், மாறாத சூழல், கேள்விக்குறியாய் நிற்பவை, 'முடியாது - தெரியாது' என்ற பதிலையே சுமந்துவருகிற நடப்பு நிலை..இவற்றினிமித்தம் உங்கள் உள்ளத்தை அரித்துக் கொண்டிருக்கிற பயத்தை இயேசு அறிந்திருக்கிறார். உங்கள் உணர்வுகளையும், தவிப்புகளையும் புரிந்திருக்கிற இயேசு ஒருவரால்தான் பூட்டப்பட்ட உங்கள் வீட்டு கதவுக்குள்மட்டுமல்ல, உள்ள கதவிற்குள்ளும் நுழைந்து பயத்தைப் போக்கமுடியும். அவரின் பிரசன்னம் மட்டுமே உங்களை தைரியப்படுத்தமுடியும். அவர் இன்று பூட்டப்பட்ட உங்கள் எல்லைக்குள் உங்களுக்காகவே கடந்து வருகிறார்.

**ஆச்சரியப்படுத்தினார்:** பயத்திற்கு பதிலாயிருக்கிற இயேசு சீஷர்களின் நடுவே வந்து நின்றவுடனே எப்படி வந்தீர், என்ன நடக்கிறது, என்ன நடக்கப்போகிறது என கேள்வியெழுப்ப அவர்களுக்கு தோன்றவில்லை. அவரை பார்த்ததும் பயம் நீங்கி தைரியமடைந்தனர். 'உங்களுக்கு சமாதானம்' என்ற நற்செய்தியை இயேசு அவர்களுக்கு அறிவித்து ஆச்சரியப்படுத்தினார். நடந்தது, நடப்பது, நடக்கவிருப்பது எல்லாவற்றிற்கும் பதில் 'உங்களுக்குச் சமாதானம்' என்ற இயேசுவின் ஒரே வரி

யில் அடங்கியிருக்கிறது. முடக்கப்பட்டிருக்கிற சூழலில் இயேசுவை பின் பற்றும் சீஷராய் உங்கள் உள்ளத்தில் எழும்புகிற அத்தனை பயங்களுக் கும் தீர்வு உங்களுக்கு சமாதானம் என்ற நற்செய்தியே. கலையாததும், குறையாததும், மறையாததும், சூழ்நிலைக்கு அப்பாற்பட்டதும், எல்லா புத்திக்கும் மேலானதுமான விலையேறப் பெற்ற சமாதானம் அது. உங் கள் காரியங்களை எந்த கட்டத்திலும் பார்த்துக்கொள்ளுகிற தேவன் உடனிருக்கிறார் என்ற தெளிவுடன் கூடிய சமாதானம் நிகரற்றது. சோக மும் சோர்வும் நிரப்ப, நிம்மதியற்று விசாரத்துடனும், விரக்தியுடனும் நம்பிக்கை இழந்து நடமாடும் ஒவ்வொருவரையும் நோக்கி 'உங்களுக்கு சமாதானம்' என்ற நற்செய்தி வருகிறது. எந்த நடப்பு சூழலும் இயேசுவின் கட்டுப்பாட்டை மீறிவிடவில்லை என்பதால் உண்டாகிற தெய்வீக சமா தானம் உங்கள் உள்ளத்தை அலைஅலையாய் நிரப்பட்டும்.

## கதவுகளெல்லாம் திறந்து அற்புதம்



பவுலும், சீலாவும் செய்த ஊழியத்தில் எதிர்ப்பையும், எதிர்மறை களையும், சிறை தண்டனையையும் காண நேரிட்டது. சரீர வலியைத் தாண்டி ஜெபம்செய்தார்கள், துதித்தார்கள், பாடினார்கள். அனுமதித்த தேவன் அசாதாரணமாய் செயல்பட்டார். அஸ்திபாரங்களை அசைத்து ஒரே நேரத்தில் முழு சிறைச்சாலையின் கதவுகளெல்லாம் திறக்கும்படி அற்புதம் செய்தார். சிறையிருப்பைப் போன்ற சூழலில் இன்றும் அற்புதம் செய்ய இயேசு வல்லவர்.

**அனுமதித்தார்:** பவுலும், சீலாவும் போக முற்பட்ட இடத்திற்கு செல்ல பிசாசிடமிருந்து தடை வரவில்லை. ஆவியானவரே தடை பண்ணினார். வேறு பக்கமாய் செல்ல முயற்சித்தபோதும், ஆவியானவரோ போக விட வில்லை. அடுத்து எங்கே போவது என்பதைக்குறித்த தரிசனத்தை அவர் பவுலுக்கு தந்தார். அந்த பட்டணத்திற்குப் போய் சுவிசேஷத்தை அறி வித்தபோது அசுத்தஆவியையுடைய ஒரு பெண் பெற்ற விடுதலை, பவுலும், சீலாவும் சிறைக்குள் தள்ளப்பட காரணமாயிற்று. பட்ட அடியால் உடலெங்கும் காயங்கள். நடக்கவோ, நகரவோ முடியாதபடி மாட்டப்பட்ட கால்கள். ஆனால் பவுல், சீலாவின் வாயோ கட்டப்பட்டிருக்கவில்லை. தேவன் அனுமதித்த சிறையிருப்பின் கட்டத்தை நல்வாய்ப்பாக பயன் படுத்திய அவர்களுக்கு நடுராத்திரிகூட வசதியாயிருந்தது. கட்டுப்பாடு மிக்க சிறைக்குள் அவர்கள் ஜெபித்து, துதித்து, பாடி தேவனை மகிமைப் படுத்திக் கொண்டிருந்தார்கள். காவலில் வைக்கப்பட்டிருந்த மற்றவர்கள் அதை கவனிக்கும்படி தேவன் அவர்கள் காதுகளை திறந்தார் (அப்.16:6-26). அடைக்கப்பட்ட கட்டமாய் அனுமதிக்கப்பட்டிருக்கிற காலத்தை தனி யாகவும், குடும்பமாகவும் ஓய்வின்றி ஜெபம்பண்ணவும், துதிக்கவும், பாட

வும் பயன்படுத்துங்கள். நம் ஜெப தூபம், துதி ஒலி, பாடல் கானம் பரலோக சிங்காசனத்தை இடைவிடாமல் எட்டிக்கொண்டே இருக்கட்டும்.

**அசைத்தார்:** சிறையில் அடைக்கப்படும்போது வழக்கமாய் முறுமுறுக்கவும், புலம்பவும், தவிக்கவும், கண்ணீர் வடிக்கவும், வலியில் முனங்கவும் தானே செய்வார்கள். ஆனால் வழக்கத்திற்கு மாறாய் இவர்கள் வாயில் இருந்து எழும்பிய பாடல், துதி, ஜெபம் பரலோகத்தில் எதிரொலித்தது. அதோடுகூட, நிசப்தமாயிருந்த சிறைச்சாலையிலும் எல்லாரும் எதிர்ப்பின்றி உன்னிப்பாய் கவனிக்கும்படி எதிரொலித்தது. கேட்ட எல்லா கைதிகளுடைய இருதயங்களும் முதலாவது இயேசுவை நோக்கி திரும்பும்படி அசைக்கப்பட்டது. அதை தொடர்ந்து முழு சிறைச்சாலை அஸ்திபாரங்களும் பலமாய் அசைக்கப்பட்டது. ஆச்சரிய அற்புதமாய் சிறை எல்லைக்குள்மட்டும் பூமி அதிர்வு. சுவர்கள் சரியவில்லை, மேற்தளம் சாயவில்லை, ஆனால் அஸ்திபாரம் அசைந்தது. அந்த வினாடியே பூட்டப்பட்டிருந்த சிறைச்சாலையின் எல்லா கதவுகளும் சாவியின்றி தானாய் திறந்தன. கைகளும், கால்களும் கட்டப்பட்ட நிலையில் பாடி, துதித்து, ஜெபித்துக் கொண்டிருந்த பவுல், சீலாவின் கட்டுகள் மட்டுமல்ல, கேட்டவர்களின் கட்டுகளும் கழன்று போகும்படி தேவன் அற்புதம் செய்தார். உங்கள் ஜெப சத்தமும், துதி சத்தமும், பாடல் சத்தமும் இந்த சிறையிருப்பில் பெருத்த அசைவை கொண்டுவரும். பலருடைய காதுகளை மட்டுமல்ல, அவரண்டை திரும்பும்படி அவர்களின் இருதயங்களையும் தேவன் திறந்திருக்கிற நற்செய்தியை நம் காது கேட்கும். வியாதி, வறுமை, தொழில் முடக்கம், விரக்தி... இதுபோல அடைக்கப்பட்டிருக்கிற எல்லாருடைய கட்டுகளும் கழன்று போகும். அற்புத வல்லமையை கண்கூடாக காண்போம்.

## கதவை தாண்டி உயர்வு



பார்வோனுடைய பிரதானியால் பொய் பழியோடு காவல் கிடங்கிற்குள் தள்ளப்பட்ட நாள் யோசேப்பிற்கு தெரியும். ஆனால் விடுதலை உத்தரவோடு காவல் கிடங்கை விட்டு வெளியேறும் நாள்தான் தெரியாது. பார்வோனே தலையிட்டால்தான் விடுதலை என்பதால், அது வருடக்கணக்காய் நீண்டு போனது. ஒரு நாள் காலை தீவிரமாய் காவல் கிடங்கின் கதவு திறக்கப்பட்டது. கைதியாய் அங்கிருந்து வெளியேறிய அதே யோசேப்புதான் அன்றே அரமனையில் பார்வோனுக்கடுத்த அதிபதியாய் உயர்த்தப்பட்டார் என தேசளவில் பேசப்பட்டது. கதவை தாண்டி உயர்த்தியவரின் குறுகாத கரம் உங்களையும் உயர்த்த போதுமானது.

**அறிவித்தார்:** 'என்.. அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது, உங்கள் அரிக்கட்டுகள்.. வணங்கி நின்றது.. சூரியனும் சந்திரனும் 11 நட்சத்திரங்களும்

என்னை வணங்கினது' என்று தேவன் முன்னறிவித்ததை யோசேப்பு தன் சகோதரரிடம் அறிவித்தார் (ஆதி.37:5-9). அறிவித்ததற்கு ஆதார மாக அதைத் தொடர்ந்து எதுவுமே நடக்கவில்லை. எதிராக எழும்பி நின்ற சகோதரர்கள், யோசேப்பை சவக் குழிக்குள் நிரந்தரமாய் அடக்கிவிட முடிவு பண்ணினார்கள். ஆனால் அவர்களால் ஒருசில மணி நேரங்கள் வெறுங்குழிக்குள்தான் தள்ள முடிந்தது. அழிக்க நினைத்த அவர்கள் சதி திட்டம், யோசேப்பு அடிமையாய் விற்கப்படும்படியே முடிந்தது. யோசேப் பின் இரத்தத்தோடு காட்ட நினைத்த பலவருண அங்கியை வெள்ளாட்டு கடாவின் இரத்தத்தில் தோய்த்தே தகப்பனிடம் காட்ட முடிந்தது. தேவன் முன்னறிவிப்பதை எந்த சதிகளாலும், எப்படிப்பட்ட யுக்தியாலும், எப்பேர்ப் பட்ட மனிதராலும் தடுக்க முடியாது. காவல் கிடங்கு தேவதிட்டத்தை அடைத்து வைக்கமுடியாது. நடக்கவிருப்பதாக தாம் முன்னறிவித்து நம்பப்பண்ணியதை தேவன் நிறைவேற்ற வல்லவர். அடைக்கப்பட்ட சூழலையும், நம்பிக்கையற்ற காரியங்களையும், பலத்தோடு எதிர்ப்பவர் களையும் பார்த்து சோர்ந்து விடாதீர்கள். அறிவிக்கப்பட்ட தேவதிட்டம் அடைக்கப்பட்ட கதவுகளையும் தாண்டி அவர் முன்குறித்தபடியே நேர்த்தி யாய் நிறைவேறும்.

**அரங்கேற்றினார்:** தேவன் முன்னறிவித்தது நிறைவேற காத்திருந்த 13 வருடங்களின் முற்பகுதியில் போத்திபார் வீட்டில் பெற்ற பதவி, அவர் உயர்வு படியில் ஏறிக் கொண்டிருப்பதாக எண்ண வைத்தது. ஆனால் அங்கிருந்து காவல் கிடங்கிற்குள் போடப்பட்டது, பின்னோக்கி தள்ளப் பட்டதாக காட்டியது. அதன்பின்னர் பானபாத்திரக்காரன்மூலம் ஒருசில நாட்களில் வரவிருப்பதாக எதிர்பார்த்த விடுதலை 2 வருடமாகியும் நடக் காமல் ஏமாற்றமளித்தது. அன்று வழக்கம்போல ஏமாற்றத்தோடு காலை யில் கைதியாய் யோசேப்பு எழுந்தார். திடீரென கதவுகள் திறக்கப்பட்டது (ஆதி.41:14). உடை மாற்றப்பட்டது. சவரம்பண்ணியதும் முகம் மாறியது. 4 சுவருக்குள் கைதியாய் கிடந்த யோசேப்பு பார்வோனுக்கு அடுத்த அதி காரியாய் தேசத்தை சுற்றிப் பார்க்க புறப்பட்டார். தலைகுனிந்து நின்ற யோசேப்பை எகிப்து தேசமே தலைவணங்கியது. என்றாலும் அவர் குடும்பத்தார் தலைவணங்கும் தேவதிட்டமோ இன்னும் நிறைவேற வில்லை. சில வருட காத்திருப்பிற்குப்பின் அதுவும் நேர்த்தியாய் அரங் கேறியது. தேவசித்தம் நிறைவேற காத்திருக்கிற உங்கள் காரியத்திலும் ஒருபோதும் தவறு நிகழ அனுமதியார். யாருடைய சதித்திட்டத்திற்கும் தேவன் உங்களை ஒப்புக்கொடார். முன் குறிக்கப்பட்ட தம் திட்டத்தை நிறைவேற்றும்படி அடைக்கப்பட்ட கதவை தேவன் திறப்பார். 'தாமதம்' என வடித்த கண்ணீர், 'நல்லது' என துதிக்கிற ஆனந்த கண்ணீராகும்.

**பூட்டப்பட்ட கதவு நற்செய்தியையும், அற்புதத்தையும், உயர்வையும் கொண்டு வரும்படி உங்களுக்காக திறக்கும்!**

# செல்லணும்...சொல்லணும்!

**உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?**
**ராஜ்யத்தின் சுவிசேஷம்** பூலோகமெங்குமுள்ள.. ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும் (மத்.24:3,14)

இயேசுவோடு வருகையில் செல்லவேண்டிய கட்டாயத்தையும், இயேசுவைக் குறித்து சொல்லவேண்டிய கடமையையும் பற்றிய பகுதி இது!

எப்போதும் 'அவசரம்' என்ற விளக்கத்தோடும், என்றும் 'நேரமில்லை' என்ற பதிலோடும் இயங்கிக் கொண்டிருந்த மக்களை உலுக்கிய வைரஸ் நான்கு சுவர்களுக்குள் அடைத்தது. பஞ்சங்களும், கொள்ளைநோய்களும் ..பல இடங்களில் உண்டாகும் (மத்.24:7) என இயேசு முன்னறிவித்த வருகையின் அடையாளங்களை பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவசரம் என ஓட அவசியமின்றி நேரத்தைக் கொடுத்து, **'பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை' (ஏசா.45:22)** என உண்டாக்கினவர் தற்சமயம் அறிவுறுத்தி வருகிறார். தேவனுடன் உறவாட, வேதம் வாசித்து தியானிக்க, தனியாயும் குடும்பமாயும் ஜெபிக்க, ஆவியின் கனிகளில் பெருக, குடும்ப உறவையும், ஐக்கியத்தையும் வளர்த்துக் கொள்ள பயன்படுத்திக் கொள்ளவேண்டிய நேரம் இது. பயம், பட்டினி, நோய், நம்பிக்கையின்மை என வாடிக் கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் பிழைக்க வைக்கிற இயேசுவையே நோக்கிப் பார்க்கும்படி அவர்களுக்கு அறிமுகப்படுத்துகிற பொறுப்பை நிறைவேற்றவேண்டிய சமயம் இது.

## நீங்க யார்?...நீங்க அறிந்துகொள்ளுங்கள்!

கூடைபந்து விளையாட்டில் ஒரு அணியினர் தங்கள் எல்லையில் பந்தை கொண்டு வந்து, கூடைக்குள் போட்டு, வெற்றி எண்களை குவிக்காதபடி எதிரணியினர் மும்முரமாய் பாய்ந்து தடுப்பார்கள். சிலுவையில் வெற்றியெடுத்த இயேசுவை அணி தலைவராய்க் கொண்ட வெற்றி அணியில் இடம்பெற்ற வெற்றியாளர் நாம்தான். பொல்லாங்கன் என்ற பெயரோடு நம் வெற்றியை தடுக்க எதிரணியில் செயல்படும் பிசாசையும், வான மண்டலங்களில் உள்ள சேனையின் செயல்பாடுகளையும் புரிந்து கொள்ளுங்கள் (எபே.6:12,16).

பந்து கூடைக்குள் போடப்படும் வெற்றியை எதிரணியினர் தடுக்க மும்முரமாயிருப்பது போலவே விசுவாசத்தின் விளைவாய் உண்டாகிற வெற்றியை தடுக்க பொல்லாங்கனான பிசாசும் அவன் சேனையும் மும்முரமாயிருக்கிறது. பிரச்சனைகள், போராட்டங்கள், எதிர்ப்புகள், தனிமை, வியாதி, எதிர்மறைகள் இவைகளின் நடுவே நம் விசுவாசத்தை தடுப்பதில் குறியாயிருக்கிற பொல்லாங்கன்மேல் வெற்றியெடுக்க தேவவசனத்தை திரும்ப திரும்ப வாசித்து மனனம் பண்ணி உரிமை பாராட்டுவோம். **நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (Iயோவா.5:4).**

Date of Publication: 28-04-2020
Registered: TN/MA/88/2018-2020
Licenced to Post Without Prepayment Under
Licence No. Registered:TN/WPP-06/SR/2018-2020
Posted at RMS Madurai - 625 001.
Posted on 28th & 29th April 2020
Registered News Paper: RNI No. 72169/99
Registrar Of News Papers, NewDelhi.

## கஷ்டத்தை சமாளிக்க கைகொடுப்பது

## பரிதபிக்கிறவரா? பக்கபலமாயிருக்கிறவரா ?

நல்லாயிருந்தவர்களுக்கா இந்த நிலை என **வருத்தப்பட்டாங்க!**

கைகொடுக்க நினைத்தாலும் முடியவில்லையே என **துக்கப்பட்டாங்க!**

வரக்கூடாதது நேர்ந்து விட்டதே என்று **வேதனைப்பட்டாங்க!**



இருப்பதை அடைமானம் வைத்தாவது மீட்க முயற்சிப்பதாக **தைரியமளித்தாங்க!**

உயரதிகாரிகளிடம் செல்வாக்கை பயன்படுத்தி பேச **முன்வந்தாங்க!**

அடிக்கடி பார்க்க வந்து பாரத்தை குறைக்க **வழிபண்ணினாங்க!**

தோள்கொடுத்து தாங்குபவரின் பலம் குறைவானதுதான்.

ஆனால் **நான் மனுஷனல்ல தேவனாய் இருக்கிறேன் (ஓசியா 11:9)** என்று சொன்னவரின் பலமோ உங்களை தூக்கி நிறுத்துவதற்குப் போதுமானது!

If undelivered please return to
SIS. SUNITHA SUKUMAR
9, Prasad Road
Narimedu, MADURAI - 625 002.
Phone - 0452 2531627, 2533627
Cell - 98430 31627

To



M.S.Printers, Sivakasi.
Mobile: 9443325546